நேரடி கொள்முதல் இல்லை, எனவே விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை வெளிச்சந்தையில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக் கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆனுல் வெளிச்சந்தையில் நெல்/அரிசி வாங்கும் ஏற்பாட்டில் 1-2-1978 முதல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக மோட்டா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 90-க்கும் நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 95-க்கும் வாங்கப் படுகிறது.

இதனுல் விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை லாபகரமான விலைக்கு விற்க வாய்ப்பு அதிகரித்துள்ளது.

*465. வினு—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல் கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் வகையில் நிர்ணயம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. உ'ரொ. எட்மண்ட் : கொள்முதல் பற்றிய விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. அதனை மாற்றியமைக்கும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. மேலும் தற்பொழுது விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் இல்லை. கொள்முதல் ஆலை அதிபர்களிடமும் மொத்த வர்த்தகர்களிடமும் லெவி மூலம் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் உபரி நெல்லை வெளிச்சந்தைகளில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக்கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தவிர, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வெளிச்சந்தை வர்த்தகத்தின் ஒருபாகமாக, விவசாயிகளிடம் பொது விநியோகத்திற்கு பெரிதும் தேவைப்படும் மோட்டா ரக நடுத்தர நெல் வகைகளை முறையே குவிண்டால் ரூ. 90, ரூ. 95-க்கு வாங்க 1-2-1978 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு தானியங்கள் இருப்பு.

*466. வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரிசி, கோதுமை, போன்ற உணவுப் பொருள் இப்போது எவ்வளவு இருப்பு உள்ளது ?